*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' Uduvil, Chunnakam.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 17TH APRIL, 1981 No. 16

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 35/- per year.
Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*
**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

## A Life Membership Scheme

We are happy to announce that the Diocese has decided to launch *a Life Membership Scheme* for "The Morning Star" to enable the paper to withstand more confidently the economic palsies of our time and also to keep "the family" of our subscribers closer to us and get them involved in our work, started as far back as 1841.

It would *not* be difficult, we believe, for every subscriber *in Sri Lanka* to give us *a Life Membership subscription of Rs. 300* which would give the subscriber or his spouse the right of receiving the Morning Star every week, for life.

In contemporary Sri Lanka, *The Morning Star* is, to our knowledge, the only Christian Weekly in circulation. It is our earnest hope that *local subscribers* will rally round us and help us in this effort we are making to get our Christian community more involved in this important frontier of our missionary enterprise.

## Important Church Union Consultation in Sri Lanka (1981)

Dr. Michael Kinnamon of the Faith and Order Secretariat of the WCC has announced that *an International Consultation* of United and Uniting Churches will be held in Colombo from the 18th to the 25th of November this year.

The Consultation will bring together approximately 50 representatives from United Churches and Church Union Negotiating Committees. This will be the *fourth round* of such meetings organised since 1967 by the WCC's Faith and Order Secretariat.

The present kind of Union has been existing for 50 years. They were drawn more to people's attention when the Union of three large churches into the Church of South India took place in 1947.

The creation of this church remains a model even today for many churches in Africa and Asia. Since then no less than 75 churches have successfully accomplished Union in 25 churches. In addition, a hundred churches in 17 countries and of different confessions are in the course of negotiations.

"There is no miracle recipe by which churches can jump from disunion into unity" says Dr. Michael Kinnamon, "but there are models of union experienced by certain churches and we want to see how they have made out in practice and can be used for other schemes."

A lively discussion is anticipated in Colombo when the participants debate the relationship between *organic union* and current proposals for *conciliar and covenental fellowship.*

*Letter to the Editor*

## Preference to Doctors' Children in the Private Medical College

"Survival of the fittest". That is the law of the jungle. "Survival of the privileged and influential". That appears to be the idea behind the protogonists of the Private Medical College.

The views expressed on this issue by both the proponents and opponents by way of speeches and articles appearing in the press seem to disclose the fact that it is now slowly and swiftly turning out to be a class struggle.

The question that would first strike the mind of anyone who has no special interest in this profession is whether a Private Medical College is really essential for a small country like Sri Lanka.

The Ministry of Plan Implementation in its report recently has said that the shortage of doctors in the medical services is around 800 to 900 and that by 1983, with the annual intake of students in the medical faculties of the various universities having been increased to 400, the country will have sufficient number of doctors.

Citing this report, Dr. S. Rajanayagam, President, College of Surgeons, Sri Lanka, in his recent address at the Sri Lanka Foundation Institute has cautioned about the possibility of mass unemployment among the qualified doctors in a few years time and as a remedial measure stressed the need to restrict the admissions to the medical faculties by raising the standard at the entrance level.

When this is so, it is rather amusing to read the views of the advocates of the Private Medical College. For whose benefit are they trying to establish a Private Medical College?

It is reported that preferential treatment will be given to doctors' children and in a desperate bid to defend this basis of selection, a doctor from Kurunegala says that doctoring is a way of life imperfectly understood by those outside it. If one is to go by this good doctor's way of thinking, dispensing is a way of life for a dispenser's son, nursing for a nurse's daughter and of course scavenging for a scavenger's son and these are imperfectly understood by those outside them.

If a doctor's son competing with an outsider like a teacher's son cannot come within the 400 selected yearly to the medical faculties he is not fit even to follow a pre-medical course.

Gone are the days when the affluent finding their sons' IQ not high enough to follow professional courses like medicine and engineering sent them behind tea bushes and under coconut groves in lucrative posts.

**P. C. P. Gnanadurai.**

Uduvil.
14-4-81.

### Editor's Note

The overriding issue with regard to admissions to our medical faculties, in Sri Lanka, is *not* that we will be glutted with medical personnel in the next few years.

What is fundamental is the provision of an alternative *channel* into which the annual steady stream of 'deserving candidates' ("refugees" of a controversial university admission system) can be diverted without being wasted to the country and becoming in themselves victims of unglamorous frustration.

Nothing would be lost by giving the Private Medical College (a pioneer venture) a trial.

The danger of producing medical professionals in large numbers in excess of the manpower needs of the country seems to have been pushed to the limelight only after the Private Medical College project was mooted.

## Women in the Ministry

The United Methodist Church, Ohio has elected Dr. Marjorie Mathews (64) as Bishop of Traverse City, Michigan. She has described her reaction as 'comparable to the first woman on the moon'.

The Anglican Church in Kenya has ordained to the priesthood Rev. (Mrs.) Lusia Okuthe (51), a deaconess since 1976 at a special ceremony in Kisumu. She is the first black African female church priest south of the Sahara.

Commenting on these developments, the Director of the WCC's Study on Men and Women in the Church said that the events underline the dawning of a new time when women and men in ministry will mutually empower one another in authority and servanthood.

"I like the analogy" said the Director, that Bishop Marjorie Mathews gives to 'walking on the moon'. It is a different space, but still you will have to put one foot in front of the other. You don't just stand there."

## World Muslim Congress

"Christians and Muslims working together — the ethics and practices of humanitarian and development programmes" will be the subject of a Consultation, jointly sponsored by the WCC and the World Muslim Congress to be held at Karachi, Pakistan in September this year.

The General Secretary of the World Muslim Congress is Dr. Inamullah Khan, who paid his first official visit to the WCC in February this year.

## IN MEMORIAM

IN AFFECTIONATE MEMORY OF

### Luther James Selvarajah

Could one muffle the volley of thoughts of him —
When, more and more unroll, making pain more painful
Could one turn away from the good things, they say of him—
When, countless favours in charity or chivalry,
To friend, family and neighbour he rendered
Could one cease to wonder —
When, he was a monument of grateful devotion to parents,
Seemed only a youngster to brothers and sisters,
To neices and nephews, one admired and encircled,
A link-role he played between generations
Could one love him less —
When full well he loved his own,
And equally well winced at the faulty
You are gone from us. We miss you. But,
You are poised into higher glory,
Which is much more to you and us

**Family.**

## IN MEMORIAM

IN EVER LOVING MEMORY OF

### Anna Nesamma Arudpragasam

Died: April 20th, 1969

*"There is joy in the Service of Jesus, our Lord."*

Our dearest Grand-mother rememberad with gratitude by George & VijeyaDevi Thambyapillay.

University of Maiduguri,
Nigeria.

## Not Another Good Cause

The Church of Norway desires consciously to avoid defining disabled persons as another 'cause for the church'. According to Mr. Gisle Haugum, Consultant for deaconal questions at the Church of Norway's National Council, there is a wish that the church should focus on itself and on how individual congregations meet the needs of disabled persons.

These are matters which should be important this year as any other year.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [ வெள்ளிதோறும் வெளிவருவது.

' நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 141 ] 17 — 4 — 1981 [ இதழ் 16


## முடிந்தது

முடிந்தது சஞ்சலம்; முடிந்த பாடுகள்;
முடிந்தது வறுமை நோய்; முடிந்த சிந்தனை;
முடிந்தது தீர்க்கர் சொல்; முடிந்த முன்குறி;
முடிந்தது கருதிய கருமம் முற்றுமே!

முடிந்தது பாவவி மோச னப்பலி;
முடிந்தது பழமுறைச் சடங்கு முற்றிலும்;
முடிந்தது குவலயத் திரட்சை மொய்ம்புற;
முடிந்தது சீவியம் முழுதும் என்பவே!

— இரட்சண்ய யாத்திரிகம்: குமாரபருவம்

"முடிந்தது" ஆண்டவராகிய இயேசு சிலுவையினின்று மொழிந்த இறுதிக் கூற்றுக்களில் ஒன்று. "நிறைவேற்றப் பட்டாயிற்று" என்பது இதன் பொருள். அப்படியாயின் இது தோல்வியடைந்த ஒருவரின் அவலக்குரல் அல்ல; ஒரு வெற்றி வீரனின் குதூகலத் தொனியெனவே நாம் கொள்ளவேண்டும். அது எப்பேர்ப்பட்ட வெற்றியென்பதற்கு வெறுமையாய்க் காணப்பட்ட கல்லறை மட்டுமல்லாது வரலாறு அனைத்துமே சான்றுதரும்.

யூத சமயத் தலைவர் "முடிந்தது" என்றிருந்தால், இயேசுவைப் பற்றிய தமது சதித் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டாயிற்று எனக் கருதியிருப்பார்கள். தமது ஆதிக்கத்திற்குப் பங்கம் விளைவித்துக் கொண்டிருந்த அவர் சிலுவையிலேற்றிக் கொல்லப் பட்டதினால் தமக்கு வெற்றியெனக் கொண்டிருப்பார்கள். அதுவே அவர்கள் திட்டந்திலிருந்த முடிவு.

பிலாத்து, அரசாங்கப் பிரதிநிதி, நடுநிலை கடைப்பிடிக்கப் பயந்திருந்த கோழை, கைகளைக்கழுவினான். "இவ் வழக்கையிட்ட வேதனையில் என் பங்கு முடிந்தது; என் மனக்குழப்ப நிலைக்கு முடிவு கண்டு விட்டேன்" என அவன் மனதிற் கொண்டு "முடிந்தது" என்றிருக்கலாம். அது அவனுக்கு வெற்றி.

இவை மனித சிந்தனை; கடவுளின் நித்திய சித்தத்திற்கு மாருனவை. எனவே கல்லறை வெறுமையாக்கப் பட்டபோது இவர்கள் வெற்றியெனக் கொண்டவை தோல்வியாயின். நியாயந்தீர்த்தவர்கள் நியாயந் தீர்க்கப்பட்டவர்களாயினர். கல் வைத்தடைத்து முத்திரை போட்டுக் கடவுளின் கரம் கிரியை செய்யாதவாறு காரியங்களை நடப்பிக்கக் கூடியவன் யார்?

"முடிந்தது" என முத்தனுர் இயேசு மொழிந்ததை விரித்துக் கிறிஸ்தவக் கம்பன் எனத் தமிழுலகம் போற்றும் கவி வித்துவான் கிருஷ்ணபிள்ளை கூறியதை மேலே தந்தோம். உலகம் பட்டுவந்த சஞ்சலமும் அதன் பாடுகளும் முடிந்தன. வறுமை யெனும் நோயும் இல்லாதொழிந்தது. விளைவு கருதாது நினைத்தது சொல்லும், செய்யும் மனித சிந்தனைகள் மாய்ந்தன. இறை வாக்குரைப் போர் கூறியவை இத்தோடு நிறைவேற்றங் கண்டதால் தீர்க்கர் வார்த்தை இனி வர வேண்டிய தேவையில்லை. அவர் கொடுத்த புனித பலிக்கு முன்னடையாள மாகவே இந்தளவும் செலுத்தப்பட்ட பலிகள் இருந்தமையால் இனி அவைக்கிடமேயில்லை. இறைவன் தன் மனதிற் கொண்ட நித்திய நோக்கம் நிறைவேற்றங் கண்டதால்.

பாவமனைத்தும் போக்கவல்ல பலி நிறை வேற்றப்பட்டது ஆகவே பழமையான சடங்காசாரங்களின் தேவையும் அற்றுப் போய் விட்டது. உலக மீட்புந் திடமான நிறை வேற்றங் கண்டது. பயம் தரும் மரணம் ஆட்கொண்ட வாழ்வும் முடிவடைந்து போனது.

இது வோர் புதிய நிலை. இதன் இலட்சணத்தைக் கவிஞர் விரித்துரைக்கிருர்:

[ ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த போது ]

தன்மமும் தவமும் ஓங்கித் தழைத்தன; அருள்மெய் வேத
கன்மமும் ஒழுக்கும் வல்லே கதித்தன, கருணை பூத்த
நன்மையும் மெய்ம்மைதானும் நடம் நவின் றுலகமெங்கும்
வன்மையும் பகையும் தேய வளர்ந்தன மருவிமாதோ!

கண்ணிய நிசிக்குள் ஆய கழிபெருந் துயிலை வீசி
எண்ணிலா உயிர்கள் காலை எம்பலோ டெழுந்த காட்சி
மண்ணியல் வினையின் மாய்ந்த மன்பதை உயிர்த்தெழுந்த
புண்ணியர் தமக்குள்ளாகப் புத்துயிர் அடைந்தாற் போலும்.

உயிர்த்தெழுந்த ஆண்டவர்க்குள்ளாய் மண்ணுலகின் மாந்தரெல்லாம் புத்துயிர் பெற்றன. இதுவே ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தல் தரும் மாட்சி. ஆதலாற்ருன்

கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான் — உலகமுய்யக்
கர்த்தாதி கர்த்தன் உயிர்த்தான்

எனக் கிறிஸ்தவப் பார் முழுதும் போற்றிப் பாடி ஆர்ப்பரிக்கிறது; ஆனந்திக்கிறது.

வரலாறு சாட்சி யென்ருேம். உயிர்த்தெழுந்த ஆண்டவரால் உயிர் மீட்சி கொண்டோர் தொகை கோடியிலும் கோடி. அவர்தம் புனித வாழ்க்கையும் செயலுமே தருமமும் தவமும் தழைத்தோங்கத் தயாபரன் கையாண்ட கருவிகள் அவை போன்ற வாழ்க்கையையும் செயலையுமே இறைவன் இப்போழுதும் வேண்டுகிருர். அவர் மீட்பின் மகத்துவத்தைக் கண்டவர்கள், அதைத் தம் அனுபவத்திற் கொண்டவர்கள், இதை உணர்ந்து கொள்வதவசியம்.

## உலகம் உய்ய உயிர்த்தெழுந்த உத்தமனுர்!

— அருள்திரு டி. ஆர் அம்பலவாணர் —

உலகம் உய்யக் கிறிஸ்து பெருமான் உயிர்த்தெழுந்தார். இத்திருநாளை நாம் ஆண்டிற்கு ஒருமுறை பெருவிழாவாகக் கொண்டாடுகிருேம். ஒவ்வொரு ஞாயிறுதோறும் இத்திருச் செயலை நினைந்து இறை வழிபாடு செய்து வருகிருேம். கிறிஸ்து பெருமான் மெய்யாகவே உயிரோடெழுந்தாரென்பது ஆதிக் கிறிஸ்தவர்களின் உறுதியான நம்பிக்கை.

உலக வரலாற்றிலே, மனிதன் மண்ணில் பிறக்கிருன்; பிறந்தவன் வாழத்துடிக்கிருன்; வாழ்பவன் சாக மறுக்கிருன்; செத்தபின் வாழ்வு முடிகிறது. முடிந்தது வரலாற்ருேடு கலக்கிறது. இறுதியில் மனித வாழ்வு பழங் கதையாய் மறைகிறது. ஆனால், மீட்பின் வரலாற்றில், கடவுள் மண்ணில் பிறக்கிருர். பிறந்தவர் வாழ மறுக்கிருர். மறுத்தவர் சாகத் துடிக்கிருர்; செத்தவர் திரும்ப உயிர்த்தெழுகிருர். உயிர்த்தபின் வாழ்வு தொடங்குகிறது. அதிலிருந்து வரலாறு வளர்கிறது. இறை வாழ்வு புது வாழ்வாய்ப் பரவுகிறது.

இதனால் உலகம் உயர்ந்தது. மனுக்குலம் மகிழ்ந்தது; திருச்சபை மலர்ந்தது. ஆம், உலகம் உய்யக் கிறிஸ்து பெருமான் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த திருநாள் தரும் செய்தி இதுவே. நமது மீட்புக்கென்று கிறிஸ்து செயல்படுத்திய மீட்பின் செயல் அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததின் மூலம் நிறைவடைகிறது.

புதிய ஏற்பாட்டை நாம் ஆராயுங்கால், ஆண்டவர் உயிர்த்தெழுந்த இம்மாபெரும் நிகழ்ச்சி, ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு ஓர் உண்மையும் ஆழ்ந்த பொருள் பொதிந்ததுமான நிகழ்ச்சியாயிருந்தது. இதனால் ஆன்மீக ஆற்றல் பெற்று இவ்வுண்மைக்கு சாட்சி பகர்ந்தனர். கிறிஸ்து தமது மீறுதல்களின் நிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார். பின், நாம் நீதிமான்களாகத் தீர்க்கப்படுவதற்கென்று உயிரோடெழுப்பப்பட்டார். கிறிஸ்து எழுப்பப்படவில்லையென்றால் உங்கள் நம்பிக்கை பயனற்றதே நீங்கள் இன்னும் பாவ மன்னிப்புப் பெருத நிலையிலேயே இருக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 15 : 17) இதுவே திருத்தூதுவர் பாரெங்கும் பரப்பிய நற்செய்தி.

நம்முன் கிறிஸ்துபிரான் கடவுளின் பிரதிநிதியாகச் செயலாற்றுகிருர். இறைவனின் திருமுன் நமது பிரதிநிதியாகச் செயலாற்றி வருகிருர். இவ்வுண்மையைத் தம் உள்ளத்தில் கொள்வோரே உயிர்த்தெழுதலின் விளைவுகளை அனுபவிப்பர்; என்றும் முடிவில்லாப் பெருவாழ்வைப் பெறுவார்கள்.

இயேசு கிறிஸ்து, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு, திரும்ப தம் சீடரிடம் வரும்போதுதான், மனிதஇனத்துடன் அவருக்கிருந்த நெருங்கிய உறவு திரும்பவும் நிலைநாட்டப்பட்டது. இதனால் அவர்கள் புதுவாழ்வடைந்தனர். உயிர்த்தெழுந்த நற்செய்தியை உலகெங்கும் அறிவிப்பதே தமக்கு இறைவன் அளித்த ஆணையென்பதை உணர்ந்து செயலாற்றினர்.

உயிர்த்தெழுந்த பண்டிகையை நாம் கொண்டாடும் போது, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து அடைந்த வேதனைகளையும் பாடுகளையும் நாம் மறக்க வேண்டும் என்பதல்ல. சிலுவையின் செய்தியை நாம் புரிந்து கொண்டு, நமது பாவங்களுக்காக மரித்த எம்பெருமானைச் சந்திக்க, உயிர்த்தெழுந்த நிகழ்ச்சி உதவியளிக்கிறது. அன்று பவுலடியார் கூறியதுபோல், "அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானுர்" (I கொ. 15 : 8) என்ற அனுபவத்தை நாம் பெறும் போதுதான், சிலுவையின் செய்தியைத் தெளிவாய் நாம் அறிந்து கொள்ள முடியும்.

உயிர்த்தெழுதலின் பின் நமதாண்டவரின் சீடர்கள் அவரை நேர்முகமாய்ச் சந்தித்து, கலிலேயாவிலும் யூதேயாவிலும் தாம் முன்னர் சந்தித்த அதே கிறிஸ்து தான் இவர் என்ற உண்மையை அறிந்தனர். அவர் தம் காயப்பட்ட கரங்களையும் கால்களையும் தம் சீடருக்குக் காட்டி, மரணத்தை வென்ற வெற்றி வேந்தராய் அவர்கள் முன் நின்ருர்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், முன்பு அவர் இவ்வுலகத்தோடு கொண்டிருந்த இடையருத உறவு, இம்மைக்குரிய நமது வாழ்வு முழுவதையும் மறுருபப்படுத்தி புது வாழ்வை அளிக்கிறது. சிலுவையில் அவர்பட்ட பாடுகளின் வழியாய் இறைவனின் பிள்ளைகளாய் நாம் சுவிகாரம் செய்யப்படுவோம் என்பதற்கு உறுதி அளிக்கும் முத்திரை இதுவே.

உயிர்த்தெழுந்த எம்பெருமான் தமது சீடரைச் சந்தித்து கூறிய முதல் மொழி, "பயப்படாதிருங்கள்;" "உங்களுக்குச் சமாதானம்" என்பதே. நமது திருமறையில் ஒவ்வொரு நெருக்கடியான கட்டத்திலும் பயப்படாதிருங்கள் என்றபதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உயிருள்ள இறைவனிடம் தொடர்புகொள்ள மனிதன் அஞ்சும் போது, தூய்மையும் மகத்துவமும் உள்ள இறைவனின் திருமுன் அவன் நிற்கத்தயங்கும் போது, உயிர்த்தெழுந்த ஆண்டவர் அன்று மட்டுமல்ல, இன்றும் நம்மை நோக்கிப் "பயப்படாதிருங்கள்" என்றே தேற்றுகிருர்.

இன்று நாம் பயங்கரமான சூழ்நிலையில் வாழ்கிருேம். சொற்களால் விவரிக்க முடியாத திகில் நம் மனதில் குடிகொண்டிருக்கிறது நம் வாழ்வு, நம் பிள்ளைகளின் வருங்காலவாழ்வு, இவற்றை நினைக்கவே திகிலடைகிருேம்.

இத்தகைய சூழ்நிலையில், நேற்றும் இன்றும் என்றும் மாருத நம் பெருமான், தம் உயிருள்ள பிரசன்னத்தை நமக்கு அருளுகிறவராய், "பயப்படாதிருங்கள்" "உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று உறுதியளிக்கிருர்.

உயிர்த்தெழுந்த ஆண்டவரின் வாக்கை ஏற்போர் உள்ளத்தில் அமைதி நிலவும். அவர்கள் அவரின் அன்பில் இணைந்த புது வாழ்வை வாழ முடியும். கிறிஸ் அன்பைவிட்டு என்றும் நம்மைப் பிரியாத பெருவாழ்வை வாழ வாஞ்சித்து இறைவனின் திருவடிகளை நாடுவோம், வாருங்கள்.

"என் மீட்பர் உயிரோடிருக்
கையிலே — எனக்கென்ன
குறையுண்டு? நீ சொல்,
மனமே"

# உயிர்த்தெழுதல் — சில சிந்தனைகள்

"பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் பாவமன்னிப்பும் சரீர உயிர்த்தெழுதலும் நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்"

பரிசுத்த வெந்து நாட்களிலே மேற்கூறிய வாக்கியம் எமது சிந்தனைக்கு ஒரு விருந்தாக அமைகின்றது. அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணத்திலே இவ்வடிகளை நாம் காண்கிறோம். இவற்றின் தாற்பரியம் என்ன? இவைகள் வெறும் வார்த்தைகள் மட்டும்தானா? அல்லது இவைகளில் கருத்துக் கருவூலங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை ஆராய்வோம்.

"சரீர உயிர்த்தெழுதல்" விஞ்ஞான ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடியது அன்று. பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது என்று ஆபிரகாம் கோவூர் போன்ற பகுத்தறிவாளர் இயக்கத்து மேதைகள் வாதிடலாம். ஆயினும் விசுவாசத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்த நாம் சரீர உயிர்த்தெழுதல் நமது ஆண்டவருடைய ஜீவியத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு அற்புதச் செயலாகும் என்பதை ஐயந்திரிபற ஏற்றுக்கொள்ளுகிறோம்.

மரித்தவரை உயிர்ப்பித்த நமது ஆண்டவர் தாம் உயிர்த்தெழுவது எவ்வளவு எளிதான காரியம்? "தலித்தா கூமி" "லாசருவே, வெளியே வா" என்று முறையே வீட்டிலும் கல்லறையிலும் இருந்த சிறு பெண்ணையும் லாசருவையும் ஆண்டவர் உயிர்ப்பித்தாரே. நாம் ஏன் அவர் உயிர்த்தெழுதலைப் பற்றித் தயங்க வேண்டும்? மேலும் "உயிரோடிருக்கிறவரை மரித்தோரிடத்தில் நீங்கள் தேடுகிறது என்ன?" என்று மகதலேனா மரியாள், யோவன்னாள் ஆகியோரைப் பார்த்துத் தேவதூதன் கேள்விக்கணை தொடுத்ததும் அவர்கள் திருதிருவென விழித்து நின்ற சம்பவமும் கண்டு குறிப்பிடத்தக்கது.

இந்து சமயத்தவர் பச்சைக் கூட்டுடன் பரலோகம் சென்ற அறுபத்துமூன்று நாயன்மார்களையும் ஏனையோர் சிலரையும் பற்றிப் புராண இதிகாசங்களில் கூறியுள்ளனர். இக்கூற்றுக்கள் யாவும் நிஜமானவை என்று இந்து மக்கள் ஏற்று அவ்வாறு பரகதியடைந்தோருக்கு வருடந்தோறும் பூஜைகள் செய்து வருகின்றனர்.

கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் இயேசுவின் உயிர்த்தெழுதல் விசுவாசிகளின் சரீர உயிர்த்தெழுதலுக்கு ஒரு முன்னோடியாக அமைகின்றது. நாம் மரித்தாலும், அதாவது கிறிஸ்துவுக்குள் நித்திரை செய்தாலும், பிழைத்தாலும் அவர் மூலமே செயல்பட வேண்டியவர்களாகின்றோம். கிறிஸ்துவன்றி ஜீவனுமில்லை; மரணமும் இல்லை. "மரணமே, உன் கூரெங்கே பாதாளமே உன் ஜெயமெங்கே?" என்று நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதல் சவால் விடுகின்றது.

"The King is dead; Long live the king," என்பது போல நமது இராசா மரித்தார்; ஆனால் உயிருடன் இருக்கிறார். உயிருடனிருந்து பரிசுத்தாவியின் மூலம் செயல்படுகின்றார்.

இயேசு ஏன் மரித்தார்? ஏன் உயிர்த்தெழுந்தார்? இக்கேள்விகளுக்கு விடை காணக் கடமைப்பட்டுள்ளோம். தேவகுமாரன் ஏன் மரிக்க வேண்டும்? அவர் மரணத்துக்கு அப்பாற்பட்டவரே சரி; மரித்து விட்டார். இறைவன் அவருக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளைத் தாமே செய்யமுடியும். இந்நிலையில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மர்மமாகத் தோன்றக்கூடும். ஆயினும் தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி இவைகள் எல்லாம் நிகழ்ந்தன. நிகழ்ந்த போதினில் ஏதோ நியதி இலட்சிய உருவெடுத்து நிறைவேறியது. இவ்வுலகத்தில் தமது கடமை "முடிந்தது" என விளக்கமாக ஆண்டவர் சிலுவையில் மரிக்கும் போது கூறுகின்றார்.

உயிர்த்த இயேசு இனி மரிப்பதில்லை. அங்கு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கின்றார். அவரின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் கண்ட சாத்தான் வெள்கி மனஞ்சுழித்தான். இயேசு நமக்காகச் சிலுவையில் மரித்தார்; பின்னர் உயிர்த்தெழுந்தார். இதனாலே நமது பாவங்கள் எல்லாம் நீங்கின என்று நாம் கூறிக்கொள்ள முடியுமா? இல்லை. இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் முடிந்து விட்டன. ஆனால் நாமோ இப்பூமியில் இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே நமது பாவங்கள் இன்னமும் நம்மோடு கூடவே இருக்கின்றன. இவற்றிலிருந்து நாம் விடுபடும் வழியைக் காணாதவராய்த் தவிக்கிறோம். எனினும் அவருடைய பாடுகளும் மரணமும் அவமாய்ப் போகமாட்டா. எவனொருவன் தன் பாவங்களை ஆண்டவராகிய இயேசு தாமே தம்மேல் ஏற்றுக்கொண்டு நிவாரண மளித்தார் எனநம்பி, அவர் சிந்திய திரு இரத்தத்தினாலுண்டாகும் பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்ளச் சித்தமாகி அவரையண்டிச் செல்கிறானோ அவன் தன் பாவப்பிடியிலிருந்தும் அதனாலுண்டாகும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்பைக் கண்டுகொள்ளுவான் என்பது நமது விசுவாசத்தின் அடிப்படை. காலங்களுக்கூடாகத் தம் மன்னிப்பின் நிச்சயத்தையும் மீட்பின் உறுதியையும் கண்டுகொண்ட திரளான சாட்சிகளின் அனுபவமும் இதுவே. இயேசுக் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நமது கிறிஸ்தவ மார்க்கத்தில் நடந்தேறிய ஒரு அற்புத காட்சியாக நாம் கருதிக் கொள்ளாது அதை நமது நிஜ வாழ்வில் காணப்படும் ஒரு ஆரம்பகாட்சியாகக் கருத வேண்டும். ஏனெனில் இதைத் தொடர்ந்து பல உயிர்த்தெழுதல்கள் நிகழவுள. ஆண்டவரைப் பொறுத்த மட்டில் பரிசுத்த வாரத்தில் அவர் அடைந்த பாடுகள் எதிர் வரும் உயிர்த்தெழுதலின் உற்பாதமாக அமைந்தன. "துன்பமின்றேல் இன்பமில்லை" என்பது இயேசுவின் ஜீவியத்திற்தானும் விதி விலக்காக அமையவில்லை. நாமும் இப்பேரின்பத்தை அடைய விரும்பினால் நமது வாழ்க்கையாகிய சிலுவையினூடே செல்லக்கடவோம்.

'நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.'

— கொலோசேயர் — 3:1

கிறிஸ்துவில் உரிமை பாராட்ட முற்படும் நாம் அவர் சென்ற ஒடுக்கமானதும் இடுக்கமானதுமாகிய பாதையிலே செல்லக்கடவோம். உயிர்த்தெழுந்த இயேசு தமது சீஷருக்குக் காட்சியளித்த போது கூறிய வார்த்தைகள் ஒவ்வொரு கிறிஸ்தவனின் செவிகளிலும் தொனிக்கட்டும். "உங்களிடத்தே சமாதானம் உண்டாகட்டும்" என்றார். காலாதிகாலமாக இவ்வார்த்தைகள் மனித சமுதாயத்துக்கு ஆறுதல் அளித்து வருகின்றன. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. என் பிதாவின் வீட்டில் பல வாசஸ்தலங்கள் உண்டு"

சரீர உயிர்த்தெழுதலின் பின் நித்திய ஜீவன் உண்டு என்பதை சகலரும் ஏற்றுக்கொள்வர், ஆண்டவராகிய இயேசுவின் மகத்தான குணாதிசயங்களைக் குறிப்பிடும் போது பின் வரும் அடிகளை எமது மனத்தில் பதித்துக் கொள்ளுவோமாக.

' செத்தோர் உயிர்த்தே — எழுந்த மருந்து
சீவன் தவறுதருளும் மருந்து
பக்தரைச் சுத்திகரித்திடும் மருந்து
பரம வாழ்வினில் — சேர்க்கும் மருந்து."

வை குணரத்தினம்
ஏழாலை தெற்கு

# புதிய சீனாவில் புத்துயிர் பெறும் திருச்சபை

(முற்றொடர்)

நமது சபையில் பப்திஸ்த சபை, மெதடிஸ்த சபை, சீர்திருத்தச் சபை, ஏழாம் நாட்காரர் சபை ஆகியவற்றைச் சேர்ந்த நாலு குருமார் கடமையாற்றுகிறோம். அநேக ஆண்டுகள் நீடித்த, அந்தகாரமான, துன்புறுத்தல்களைக் கண்டபின் இப்போது தான் நமது மக்கள் பகிரங்கமாகக் கடவுளை வழிபடக் கூடியவர்களாயிருக்கிறார்கள். எனவே இத்தனை திரளான மக்களுக்குச் சேவை செய்வதற்காக நமது நாமதாரணப் பிரிவுகளின் கட்டுப்பாடுகளைக் கடந்து கடமையாற்றுகிறோம்.

ஆலயத்திற்கு வெளியே சுவிசேடக்கூட்டங்கள் நடத்துவது தடை செய்யப்பட்டிருக்கிறது. எனினும் நமது சபையார் இன சனத்தவர் நண்பர்களை ஆராதனைக்கு வரும்படி அழைத்துக் கொள்ளுகிறார்கள். இன்னும் கூடிய அறிவு பெற விரும்புவோர் குருமாரைக் கண்டு பேசுகிறார்கள் புதிய கிறிஸ்தவர்களின் அறிவுறுத்தலுக்காகப் புத்தகங்களை அச்சிட்டுக் கொண்டிருக்கிறோம்.

வியாழக்கிழமை சாயந்தரம். கனம் வென்டெல் கார்சனும் இன்னும் மூவரும் கூலோ சபையின் ஆலயத்திற்குப் போகிறார்கள். வெளியே விடாதபடி மழை அடித்துப் பெய்கிறது உள்ளே வேதப்படிப்பு நடக்கிறது. குருவானவர் ஒரு கரும்பலகையை உபயோகித்து முதலாம் கொரிந்தியர் நிருபத்தின் ஒரு பாகத்தில் வேதப் படிப்பு நடத்துகிறார். 400 பேர் மிகுந்த அவதானமாய்க் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். வேதம் இல்லாதவர்களுடன் வைத்திருக்கின்றவர்கள் பகிர்ந்து கொள்ளுகிறார்கள். வேதப்படிப்பு முடிய "பாவசஞ்சலத்தை நீக்கப் பிராண சிநேகிதன் உண்டே" என 400 குரல்கள் ஒலிக்கின்றன. "உலோக துக்க துன்பத்தாலே நெஞ்சம் நொந்து சோருங்கால்" என அவர்கள் பாடும் போது கேட்போர் மனங்களைச் சிந்தனை அலைகள் மோதுகின்றன. ஆம், கலாச்சாரப் புரட்சியின் காலத்தில் இவர்கள் தான் துக்கத்தையும் துன்பத்தையும் கண்டு நெஞ்சம் நொந்து சோரும் நிலைக்கு வந்தவர்கள். தங்கள் விசுவாசத்திற்காய் நாமறியாத துன்புறுத்தல்களைக் கண்டவர்கள். இவர்கள் மீது தான் அரசின் செம்படைகள் ஏவி விடப்பட்டன. இவர்கள் தான் உண்மையிலே கருத்துணர்ந்து பாடக் கூடியவர்கள்.

ஹாங் சௌ என்ற இடத்தில் முன்னே இருந்த பிரமாண்டமான பிறிஸ் பித்தீரியன் ஆலயம் ஒன்றை 1979 செப்டெம்பர் மாதத்தில் அரசாங்கத்தின் மத சம்பந்த திணைக்களம் திறந்து வைத்தது. முந்திய அரசாங்கம் கவிழ்க்கப்பட்ட பின் — அதாவது 1976இல் இருந்து 1980 மார்ச் வரையிலும் — சீனாவில் சுமார் இருபது புரொட்டஸ்தாந்து ஆலயங்கள் இந்தத் திணைக்களத்தினால் திறந்து வைக்கப்பட்டிருந்தன. புதிதாய் திறந்து வைக்கப்பட்ட பின் பிறிஸ்பித்திரீயன், ஆங்கிலேய, பப்திஸ்த கிறிஸ்தவர்கள் ஒன்று சேர்ந்த ஐக்கியசபை ஆலயமாக இருந்து வருகிறது. இவர்களின் இறையியல் ஆதாரம் அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம் மாத்திரமே எனக் கூறிக் கொள்ளுவார்கள். வியாழக்கிழமைகளில் நடைபெறும் வேதப்படிப்பை விட ஞாயிற்றுக்கிழமைகளில் மூன்று ஆராதனைகள் நடைபெறும், ஆலயத்தில் உட்காருவதற்குப் போதிய இடம் 800 பேருக்கே உண்டு. ஆயினும் இந்த மூன்று ஆராதனைகளிலும் கூடுபவர்கள் தொகை சுமார் மூவாயிரம். இவர்களில் 2000 பேர் பூரண அங்கத்தவர்; ஆயிரம் பேர் ஞானஸ் நானம் பெறக்காத்திருப்பவர்கள். இந்த அறிக்கை கொடுக்கப் படுவதற்கு முந்திய ஞாயிறு இந்த ஆலயத்தில் 80 பேர் ஞானஸ் நானம் பெற்றனர். இங்கே வணக்கத்திற் கூடுபவர்களில் கிட்டத்தட்டக் காற் பங்கானவர்கள் முப்பது வயதுக் குள்ளான வாலிபர்.

(தொடரும்)

# ஊழியனுக்குப் பாராட்டு

சங்கானைத் திருச்சபை ஊழியன் அருட்திரு. அன்னப்பா ஜெயக்குமாரன் அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 28-ம் திகதி அத்தியட்சர் D. J. அம்பலவாணர் அவர்களினால் தென் இந்தியத் திருச்சபைகள் குருவாக அபிஷேகம் பெற்றதையிட்டு, சங்கானைத் திருச்சபையாரால் ஒரு பாராட்டு விழா மார்ச் மாதம் 13-ம் திகதி மாலை நடைபெற்றது. முதலில் ஆலயத்தினுள் ஒரு நன்றி செலுத்தும் வழிபாடு அருள்திரு. சாம் தம்பு அவர்களினால் நடாத்தப்பட்டது. அதன் பின்னர் பாடசாலை மண்டபத்தில் அருள்திரு. சாம் தம்பு அவர்கள் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது.

போதகரையும், போதகரம்மாவையும் செல்வன் ஜோயெல் முத்துராஜாவும் செல்வி நிர்மலா முத்துராஜாவும் மாலையணிவித்து வரவேற்றனர். திருமதி S. M. முத்துராஜா, திரு. A. E. இரத்தினசாமி ஆகியோர் திருச்சபையின் சார்பிலும், திரு S. சிவகுரு திருச்சபையின் நண்பர்கள் சார்பிலும் (கிறிஸ்தவரல்லாதோர்) பாராட்டுகளை வழங்கினர். பாராட்டு வைபவம் தேனீர் விருந்துடனும், தலைவரின் ஜெபத்துடனும் இனிது முடிவடைந்தது.

EDITORIAL

## The Church and Contemporary Human Suffering

We came across recently a very homely anecdote of an aged aunt who arrived on a visit to her nieces, having informed them beforehand of her intended holiday.

The children stocked up on mystery stories of which they knew she was an avid fan. Early in her stay, however, they noticed that she had not touched a single book.

When asked if she disliked their selection, she replied :— 'oh no, it's not that. I have just given up murder for *Lent.*

Good Christian people in the world today are those who, in the words of Michael Harrington, live "in cruel innocence". They are upright, honest and churchgoing. They talk about 'suffering' and give some 'charity' to alleviate human suffering. But their goodness is that of the 'bystanders'.

Such 'bystanders' are not confined to aged aunts only. The day after Pastor Kao of Taiwan was incarcerated last April, a spokesman of the Kuomitang (KMT) expressed the hope, that the imprisoned pastors which included the General Secretary of the Presbyterian Church in Taiwan, would learn from errors and become in future "preachers of heavenly bliss".

The Christian Church today is set in a world of escalating suffering. The season of Lent this year (1981) has perhaps seen more murders, attempted assasinations, gangster robberies in all of which human life has been treated as of very little value.

Hardly had the *Time* of March 23, 1981 reported a cover story on "Violent Crime in America" than on March 30, 1981, just a week later, America's own incumbent President, only 70 days old in office, was about to fall a victim to an assasin's bullet.

In our own country, the Rupees 8.1 million hold-up at Neerveli which cost the lives of two police officers provided a grotesque climax to a spate of sordid events which engulfed the country for many months in a tidal wave of unrest and tension.

In this context, it is good to note that two World Christian Assemblies are due to be held, one this year and and the other in 1983, both of which have *life* as their theme.

The Christian Conference of Asia at its Seventh Assembly next month will discusss the theme "*Living* in Christ with people" and the World Council of Churches at its Sixth Assembly at Vancouver in July 1983 will deal with the theme — "Jesus Christ, the *Life* of the World.

It is significant that both World Assemblies have chosen as their theme, the subject of *Life*, possibly because we see so much of *death* around us.

But, "convention theologies" says a modern reporter (who has covered many World Christian Assemblies) have now become out of style. They are too much like the camel, designed by 'a committee' and has its curves in the wrong places.

We do not share with the writer his cynicism but we *do see* his point that 'convention theologies' as reflected in the Reports of World Assemblies have very little value unless they are undergirded by a strong commitment to social change.

Here in Sri Lanka that "commitment" will entail among other things our being leery about imitating the way of life of industrial countries as the USA, Japan or Singapore for the simple reason that it is not safe to try to be rich in a poverty stricken world.

*Good Friday* commemorates to us the Supreme Death. The first Temptation of our Lord, according to a bibilical scholar is an attempt made by the Devil to divert '*the ultimate purpose of the mission of Jesus*.'

The Devil asks Jesus to give the people 'bread' and free them from malnutrition and hunger. The cross is not necessary.

But to our Lord, humankind has a *value* beyond 'bread and butter, rice and vitamins'. In an Asian context, it is not difficult for us to see what these 'values' are, which the mass of our people have been deprived of.

To champion the underdog, where the rich and powerful dominate, to build up dignity and self-hood where oppressive structures prevail, to uphold justice where injustice is the norm — these will entail *suffering* for the Christian.

It is such suffering that was demonstrated at the cross and it is *such suffering that is redemptive.*

IN BRIEF

O *Martin Luther.* The 500th anniversary celebrations to commemorate the birth of Martin Luther will begin on 4-5-83 at the Wartburg Castle GDR where the Protestant Reformer translated the New Testament into German. On his birthday, 10th of November a Service will be held at *Eisleben* — his place of birth and death.

O *Dr. D. T. Niles Memorial Prize.* The Methodist Church of Sri Lanka has decided to organise an Annual Competition and award a prize of Rs. 1000 to the author of the best Essay on the subject "The witness of a divided Church in a multi-religious society".

Consolation prizes not exceeding a total of Rs- 1000 will be awarded to Essays that reach a satisfactory standard.

*Melbourne 1980*

## Christ — Crucified and Risen

**Suffering and Violence**

We believe that the crucified Christ shares in the agony of the suffering of the World and that the risen Christ can bring about an inward transformation of suffering, so that it takes on a power, derived from the power of the Cross. A new solidarity is generated among those who suffer together and new resources are discovered.

As we think also of those Christians who are suffering because of their Christian faith under different political regimes, we strongly urge that human rights and religious freedom be respected in their case. We recognise with repentance that in the past and still today in other ways, we Christians have not respected religious liberty as inalienable right of humau beings.

The challenge of the powers and the suffering which results from it reveals the all-pervasive presence of violence. Violence is a fact of life whatever our situation may be. But it is a fact and not fate, and Christians must resolutely resist therefore the power of violence.

We are aware that Christians today choose different ways to resist violence. We wish to affirm the practice of non-violence as an inalienable part of the Christian obedience, and we call on the Churches to provide support for all those who commit themselves to the life of non-violence. In certain cases redemptive and vicarious suffering as that of our Lord may have to be chosen by his followers to counteract violence by suffering love — the way of the Cross. Nevertheless there are situations in which Christians find their communities involved in violence and in these circumstances without identifying totally with any political movement, the Churches should act out in concrete forms their solidarity with those Christians and others, who become involved in counter - violence to become free from the unbearable violence of the oppressors. It is necessary for all to take into account that the globel threat caused by increased militarism may in the years ahead give added importanoe to the option of non-violence.

**In Relation to Evangelism**

Jesus charged his disciples with the mandate to announce his Gospel to the ends of the earth till his return at the end of time. "Go and make disciples of all nations teaching them to observe what I have commanded." It is important that the content and mode of evangelism be reviewed in our day in the light of the advance of biblical knowledge, of our own mistakes of the past, and the emergence of new forces and problems in the present. Jesus is the core of the Gospl. "Love one another as I have loved you" is the message of his life and "repent and believe the Good News" was his teaching. This demands a radical change of attitude on the part of all who respond.

Genuine evangelism therefore is the proclamation of Jesus as Saviour and Lord who gave his life for others and who wants us to do likewise, setting us free by declaring God's forgiveness. Evangelism is true and credible only when it is both word and deed proclamation and witness. To say this is not is to suggest that evangelism derives its power from the good deeds of Christians; our failures in obedience, however can act as stumbling blocks.

In a World of large scale robbery and genocide, Christian evangelism can be honest and authentic only if it stands clearly against these injustices which are diametrically opposed to the Kingdom of God and looks for response in an act of faith which issues in commitment. Chrisiian life cannot be generated, or communicated, by a compromising silence and inaction concerning the continuing exploitation of the majority of the human race by a privileged few. "You cannot love the God whom you do not see, if you do not love the neighbour whom you see" (I John 4:20). The neighbour today also is fallen among robbers as in the Gospel parable. Woe unto the evangelizer who proclaims the word but passes by this neighbour like the priest and the levite in Jesus parable.

The unity and integrity of social action and evangelism has been suggested to us by the proposition that to issue a political challenge to the oppressor in the name of Christ may be the only authentic way of putting to him what it means to make Jesus Christ the commanding reality in his life. We thus affirm and seek to obey the mandate to bear witness among all nations to Jesus and him crucified. We reject as heretical any proclamation of a discarnate Christ, a caricatured Jesus, who is presented as not being intimately concerned with human life and relationships. Our evangelism must be set in the context of structures for global mission.

**In the Context of Mission**

In the course of our meetings, we have been led to study the significance of the crucifixion of Jesus outside the city wall. We see this as a sign, consistent with much else in his life, that he who is the centre is constantly in movement from the centre towards the periphery, towards those who are marginalized, victims of the demonic powers, political, economic, social, cultural and even—or especially — religious- If we take this model seriously we find that we must be with Jesus at the periphery, on the margin of society, for his priorities were clear.

In these ways we see the "poor" Churches of the World as the bearers of mission; World mission and evangelism may now be primarily in their hands. Perhaps they alone can waken the World to an awareness of the urgeant call of Christ to costly and radical response. We commend these thoughts to the consideration of all who care about mission.

(*concluded*)

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 17th April, 1981.